**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காட்டுமன்னார்கோயில்.</u>**

**சி.சி.64/2016**

2025 ஆம் ஆண்டு நவம்பவர் திங்கள் 13 ஆம் நாள் வியாழக்கிழமை

அ.சா.7 வாக்குமூலம் (ப.சா.7)

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | மருத்துவர். குமாரதேவி | **ஊர்** | |
| தந்தை **பெயர்** | நமச்சிவாயம் | **வட்டம்** | **காட்டுமன்னார்கோயில்** |
| **வயது** | **52** | **மாவட்டம்** | கடலூர் |
| **தொழில்** | முதன்மை குடிமையியல் மருத்துவர்,சிதம்பரம் அரசு மருத்துவமனை | | |

**The Oaths Act 1969 (Act 44/1969)-ன் விதிமுறைகளின் படி 13.11.2025 நாளாகிய இன்று திரு. M.Sam Eugine Jebakumar, B.E.,B.L., காட்டுமன்னார்கோயில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்**

**(1ம் எதிரி எதிரி ஆஜர்.2 முதல் 7 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுத் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் சிதம்பரம் அரசு மருத்துவமனையில் முதன்மை குடிமையியல் மருத்துவராக பணிபுரிகிறேன். கடந்த 13.09.2015ந் தேதி நான் மருத்துவமனையில் அலுவலலில் இருந்தப்போது வெற்றிவேல் த.பெ. சோமசுந்தரம் (வயது 40), அகரசோழதரத்தை சேர்ந்தவர் சிகிச்சைக்காக வந்தார். அவரை விசாரித்தப்போது தெரிந்த நபர்கள் 3 பேர் அன்று இரவு 8.15 மணிக்கு அவரது இல்லத்தில் வைத்து இரும்பு தடியாலும், கத்தியாலும் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்து பார்த்தப்போது சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு ஏற்பட்டு இருந்த காயங்களானது 1. வலது முதுகு பக்கத்தில் கிழிந்த காயம் 8*0.2 செ.மீ. காணப்பட்டது. அவர் உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்ப காயம் என்று சான்று அளித்தேன். வெற்றிவேல் என்பவரை பரிசோதித்து வழங்கிய காய சான்றிதழ் அ.சா.ஆ.2 ஆகும்.

அன்றைய தினம் அதே நேரத்தில் ஜெயகொடி க.பெ. வெற்றிவேல் (வயது 38), அகரசோழதரத்தை சேர்ந்தவர் சிகிச்சைக்காக வந்தார். அவரை விசாரித்தப்போது தெரிந்த நபர்கள் 3 பேர் அன்று இரவு 8.15 மணிக்கு அவரது இல்லத்தில் வைத்து தன்னை கையால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்து பார்த்தப்போது சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு ஏற்பட்டு இருந்த காயங்களானது 1. சிராய்ப்பு காயம் 0.2 *0.1 செ.மீ. அளவில் வலது முழங்கையில் காணப்பட்டது. அவர் உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்ப காயம் என்று சான்று அளித்தேன். ஜெயகொடி என்பவரை பரிசோதித்து வழங்கிய காய சான்றிதழ் அ.சா.ஆ.3 ஆகும்.

அன்றைய தினம் அதே நேரத்தில் ஆதி லெட்சுமி க.பெ. இளையபெருமாள் (வயது 55), அகரசோழதரத்தை சேர்ந்தவர் சிகிச்சைக்காக வந்தார். அவரை விசாரித்தப்போது தெரிந்த நபர்கள் 2 பேர் அன்று இரவு 8.15 மணிக்கு அவரது இல்லத்தில் வைத்து தன்னை கத்தியாலும், கையாலும் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்து பார்த்தப்போது சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு ஏற்பட்டு இருந்த காயங்களானது 1.அவரது வலது கையில் கிழிந்த காயம் 5*1 செ.மீ. அளவில் காணப்பட்டது. அவர் உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்ப காயம் என்று சான்று அளித்தேன். ஆதிலெட்சுமி என்பவரை பரிசோதித்து வழங்கிய காய சான்றிதழ் அ.சா.ஆ.4 ஆகும்.

அன்றைய தினம் அதே நேரத்தில் மின்னல்ராஜா த.பெ. கலியபெருமாள் (வயது 35), அகரசோழதரத்தை சேர்ந்தவர் சிகிச்சைக்காக வந்தார். அவரை விசாரித்தப்போது தெரிந்த நபர்கள் 3 பேர் அன்று இரவு 8.15 மணிக்கு அவரது இல்லத்தில் வைத்து தன்னை கத்தியால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்து பார்த்தப்போது சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு ஏற்பட்டு இருந்த காயங்களானது 1.அவரது இடது மார்பில் கிழிந்த காயம் 5*0.3 செ.மீ. அளவில் காணப்பட்டது. அவர் உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்ப காயம் என்று சான்று அளித்தேன். மின்னல்ராஜா என்பவரை பரிசோதித்து வழங்கிய காய சான்றிதழ் அ.சா.ஆ.5 ஆகும்.

மேற்கண்ட நபர்களுக்கு மேற்சொன்ன ஆயுதங்களால் தாக்கப்பட்டு இருந்தால் மேற்கண்ட காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

மேற்படி காயம்பட்ட நபர்களை தாக்கியதாக தெரிவித்துள்ள ஆயுதங்கள் எதுவும் என்னிடம் காட்டப்பட்டதா என்றால் என்னிடம் காட்டப்படவில்லை. வெற்றிவேல் என்பவர் தெரிந்த 8 நபர்கள் தன்னை தாக்கியதாக தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். அந்த 8 நபர்களில் ஆண் நபர்கள், பெண் நபர்கள் எத்தனை என்று குறிப்பிட்டு எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். தெரிந்த நபர்களின் பெயர் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

கத்தியால் தாக்கியதாக தெரிவித்துள்ள நிலையில் அது என்ன வகையான கத்தி என்று குறிப்பிட்டு எதுவும் கூறவில்லை என்றால் சரிதான். விபத்து பதிவேடு வழங்குவதற்கு என படிவம் மருத்துவமனையில் பராமறிக்கப்படுவது உண்டு என்றாலும், அந்த படிவத்தில் இந்த விபத்து பதிவேடுகள் வழங்கப்படவில்லை என்றாலும் சரிதான். அந்த படிவங்கள் இல்லாத சமயத்தில் இவ்வாறு விபத்து பதிவேடு வழங்குவது வழக்கம். காவல்துறையினர் மேமொவுடன் மேற்படி நபர்கள் பரிசோதனைக்கு வந்ததாக விபத்து பதிவேடுகளில் குறிப்பு செய்யவில்லை என்றால் சரிதான்.

மேற்படி விபத்து பதிவேடுகளில் காவல்துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் அவ்வாறு குறிப்பிடும் வழக்கம் இல்லை. வெற்றிவேல் என்பவருக்கு காணப்பட்டதாக சொல்லப்படும் காயத்தில் தெரிந்த ரத்தத்தின் நிறம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான், இந்த வகையான காயத்திற்கு அவ்வாறு ரத்தத்தின் நிறம் குறிப்பிடும் வழக்கம் இல்லை. கிழிந்த காயமானது மேல் இருந்து கீழாக இருந்ததா அல்லது இடமிருந்து வலமாக இருந்ததா என்பது குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

மேற்பட்ட காயம் அதில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பு ஏற்பட்டு இருக்க வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். கூர்முனை உடைய கத்தியால் தாக்கும்போது வெட்டுகாயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். மேற்படி காயத்தை தவிர்த்து வேறு காயங்களோ, உடலில் வலியோ இருப்பதாக எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி காயமானது தகரத்தின் மீது விழும்போது ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

ஆதிலெட்சுமி என்பவரை நான் சிகிச்சை அளித்தப்போது அவரை 2 நபர்கள் தாக்கியதாக தெரிவித்தார் என்றால் சரிதான். அவரும் ஆண் நபரா, பெண் நபரா

என்றோ பெயர் விவரங்களோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சிகிச்சைக்கு யாரும் அழைத்து வந்தனரா அல்லது தாமாக வந்தாரா என்பது குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அவரை தாக்கியதாக தெரிவித்துள்ள கத்தி என்ன வகையான கத்தி என்று குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். அந்த காயத்தின் தன்மை இடமிருந்து வடமா இல்லை மேல் இருந்து கீழா என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். மேற்படி நபர் தெரிவித்துள்ள நேரத்திற்கு முன்பாக மேற்படி காயங்கள் ஏற்பட்டு இருக்க வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். கத்தியால் வெட்டும் போது வெட்டு காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

மேற்படி நபரும் போலீசார் மேமொ உடன் வந்தாரா அல்லது போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதா என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி நபர் தனக்கு வலது கண்ணத்தில் வலி இருப்பதாக என்னிடம் எதுவும் தெரிவித்தாரா என்றால் இல்லை. தகரத்தில் வேகமாக விழும்போது மேற்படி கிழிந்த காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். மேற்படி நபருக்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் காயம் அவரது வலது கையில் எந்த இடம் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல, வலது கை என்று குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளது. முன்னங்கையில் காயம் எதுவும் காணப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி நபர் தனக்கு வேறு காயங்கள் அல்லது வலி இருப்பதாக எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

ஜெயகொடி என்பவரை நான் சிகிச்சை அளித்தப்போது அவரை 3 நபர்கள் தாக்கியதாக தெரிவித்தார் என்றால் சரிதான். அவரும் ஆண் நபரா, பெண் நபரா என்றோ பெயர் விவரங்களோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சிகிச்சைக்கு யாரும் அழைத்து வந்தனரா அல்லது தாமாக வந்தாரா என்பது குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அவரை கையால் தாக்கியதாகதான் தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி நபர் தெரிவித்துள்ள நேரத்திற்கு முன்பாக மேற்படி காயங்கள் ஏற்பட்டு இருக்க வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். மேற்படி நபரும் போலீசார் மேமொ உடன் வந்தாரா அல்லது போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதா என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி நபர் தனக்கு வேறு காயங்கள் அல்லது வலி இருப்பதாக எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி காயமானது சொறசொறப்பான பகுதியில் வேகமாக விழும்போது ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். மேற்படி நபர் தனக்கு நெஞ்சில் வலி இருப்பதாகவோ, தலையில் வலி இருப்பதாகவோ, உடலில் வேறு

பகுதிகளில் வலி இருப்பதாகவோ தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

மின்னல்ராஜா என்பவரை நான் சிகிச்சை அளித்தப்போது அவரை 3 நபர்கள் தாக்கியதாக தெரிவித்தார் என்றால் சரிதான். அவரும் ஆண் நபரா, பெண் நபரா என்றோ பெயர் விவரங்களோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சிகிச்சைக்கு யாரும் அழைத்து வந்தனரா அல்லது தாமாக வந்தாரா என்பது குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அவரை தாக்கியதாக தெரிவித்துள்ள கத்தி என்ன வகையான கத்தி என்று குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். அந்த காயத்தின் தன்மை இடமிருந்து வடமா இல்லை மேல் இருந்து கீழா என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். மேற்படி நபர் தெரிவித்துள்ள நேரத்திற்கு முன்பாக மேற்படி காயங்கள் ஏற்பட்டு இருக்க வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். கத்தியால் வெட்டும் போது வெட்டு காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

மேற்படி நபரும் போலீசார் மேமொ உடன் வந்தாரா அல்லது போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதா என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தகரத்தில் வேகமாக விழும்போது மேற்படி கிழிந்த காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். மேற்படி நபர் தனக்கு வேறு காயங்கள் அல்லது வலி இருப்பதாக எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

அரசு தரப்பில் மறுவிசாரணைக்கு அனுமதி கோரப்பட்டு கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

சாட்சி மறுவிசாரணை

வெற்றிவேல் விபத்து பதிவேடான அ.சா.ஆ.2 ஆவணத்தில் அவரை தாக்கிய நபர்கள் 8 நபர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மறுவிசாரணைக்கு குறுக்குவிசாரணை இல்லை.

சாட்சி விசாரணை முடிந்தது.